*II .  விண்ணப்பித்துள்ள பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் விண்ணப்பதாரரால் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விசார் வெற்றிகள்*

**(ஆகக் கூடியது 25 புள்ளிகள்)**

*III .  விண்ணப்பித்துள்ள பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் விண்ணப்பதாரர் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*

**(ஆகக் கூடியது 25 புள்ளிகள்)**

*IV பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின்னர் பெற்றுள்ள கல்விசார் வெற்றிகள் மற்றும் பாடசாலையின் மேம்பாட்டிற்காக அதிபரால் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பல்வேறு வகையில் வழங்கிய பங்களிப்புக்கள் (இங்கு பாடசாலையின் மேம்பாட்டிற்காக பல்வேறு வகையில் வழங்கிய பங்களிப்புக்களுக்காக ஆகக் கூடியது 06 புள்ளிகள் மாத்திரமே வழங்க முடியும்)*

**(ஆகக் கூடியது 24 புள்ளிகள்)**

*குறிப்பு  - II, III மற்றும் IV குறிப்பிடப்பட்டுள்ள உச்ச பட்ச புள்ளிகள் நேர்முகப் பரீட்சை சபையின் இணக்கப்பாட்டுடன் சுற்றுநிருப ஆலோசனைகளுக்குப் புறம்பாகச் செல்லாத வகையில் பகிர்ந்து வேறுபடுத்தப்படும்.*

### 6.3 ஏற்கனவே உரிய பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களது சகோதர சகோதரிகள் - 14%

*(அ)  பிள்ளையின் பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்களது மூத்த பிள்ளைகள் ஏற்கனவே குறித்த பாடசாலையில் கல்வி கற்பார்களாயின் இந்த வகுதியின் கீழ் விண்ணப்பிக்க முடியும்.*

*(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கு அமைவாக இந்த வகுதியின் கீழ் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.*

**புள்ளி வழங்கும் முறை**

**I. பாடசாலையில் கற்கும் சகோதரர்கள்/ சகோதரிகள்**

*(அ)  உரிய பாடசாலையில் கல்வி கற்கும் சகோதரர்/ சகோதரி கல்வி கற்ற ஒவ்வொரு தரத்திற்கும் 02 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகள் (இதற்காக புள்ளி வழங்கும் போது பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை எத்தனையாக இருந்தாலும் ஒருவரைக் கருத்தில் கொண்டு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) (20 புள்ளிகள்)*

*(ஆ) உரிய பாடசாலையில் கல்வி கற்கும் மேலே குறிப்பிடப்பட்ட சகோதரர்/ சகோதரி அந்தப் பாடசாலைக்கு தரம் ஒன்றில் அனுமதிக்கப்பட்ட தற்போதும் கற்பவராயின் (05 புள்ளிகள்)*

*(இ)  உரிய பாடசாலையில் சகோதரர்கள்/ சகோதரிகள் இரண்டு பேர் அல்லது அதற்கு மேற்பட்டோர் கல்வி கற்பார்களாயின் (05 புள்ளிகள்)*

*(ஈ)  பாடசாலையில் இருக்கும் சகோதரர்கள்/ சகோதரிகள் பாடசாலைக்கு பெற்றுக்கொடுத்துள்ள வெற்றிகள் மற்றும் பாடசாலையின் மேம்பாட்டுக்காக பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்களால் பாடசாலைக்கு வழங்கப்பட்ட பல்வேறு பங்களிப்புக்கள் (பாடசாலைக்கு வழங்கப்பட்ட பல்வேறு விதமான பங்களிப்புக்களுக்காக உச்ச பட்சம் 04 புள்ளிகள் மாத்திரமே வழங்கப்படும் (10 புள்ளிகள்)*

**(ஆகக் கூடியது 40 புள்ளிகள்)**

**II. வதிவினை உறுதிப்படுத்தும் பிரதானமான ஆவணங்கள்**

*உரிய நபரின் பெயரில் உள்ள வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் குறித்த நபரின் பெயரில் உரித்தாகி, விண்ணப்பப் படிவத்தை முன்னிலைப்படுத்தும் வருடத்தின் ஜூன் மாதம் 30ம் திகதி முதல் முந்தைய 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சென்றிருப்பின் மொத்தப் புள்ளிகளையும் 05 வருடங்களை விடக் குறைவாகவும் 04 வருடங்கள் வரையான காலமும் சென்றிருப்பின் மொத்தப் புள்ளிகளின் 80% சதவீதமும். 04 வருடங்களை விடக் குறைவாகவும் 03 வருடங்கள் வரையான காலமும் சென்றிருப்பின் மொத்தப் புள்ளிகளின் 60% சதவீதமும், 03 வருடங்களை விடக் குறைவாகவும் 02 வருடங்கள் வரையான காலமும் சென்றிருப்பின் மொத்தப் புள்ளிகளின் 40% சதவீதமும், 02 வருடங்களை விடக்*

வதிவிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு மிகவும் அண்மையிலுள்ள பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்க பாடசாலைகள் இல்லாவிடின், உச்சப் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பாடசாலை விட அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்க பாடசாலைகள் அமைந்திருப்பின் உச்ச பட்ச புள்ளிகளில் இருந்து அண்மையிலுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் **3.5** புள்ளிகள் வீதம் குறைக்கப்படல் வேண்டும்.

*(பிள்ளைக்கு அனுமதி பெற்றுக் கொள்ளக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்க பாடசாலை என்பதால் கருதப்படுவது, குறித்த பிள்ளைக்கு அனுமதி பெற்றுக்கொள்ளக்கூடிய போதனா மொழி மூலத்துடன் கூடிய பாடசாலையும், தனக்குரிய பெண்கள் அல்லது ஆண்கள் பாடசாலை என்பதும், கலவன் பாடசாலை என்பதும், உரிய பிள்ளையின் சமயத்தினருக்கு 10% அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தில் அனுமதி வழங்கப்படும் அரசாங்க பாடசாலைகளாகும். இருப்பினும் சமயம் சார் சதவீதங்கள் குறிப்பிடப்படாத பாடசாலைகளுக்கு எந்தவொரு சமயத்திற்குரிய மாணவர்களையும் அனுமதிக்க முடியும்)*

**(ஆகக் கூடியது 35 புள்ளிகள்)**

## 7.0 யுத்தக் கடமைகளில் ஈடுபட்ட முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்படும் விசேட அனுசரனை

7.1 யுத்தப் பணிகளில் ஈடுபட்ட முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அல்லது உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் படிவங்களூடாக பொருத்தமான பிள்ளைகளை தெரிவு செய்வதற்காக விதிமுறைகள் மற்றும் புள்ளி வழங்கும் முறைகள் உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு அதன் படி பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவர். இதன் போது யுத்தப் பணிகளில் ஈடுபட்டு அங்கவீனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

7.2 பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் ஒரு பாடசாலையில் ஒரு சமாந்தர வகுப்பிற்கு 05 பிள்ளைகள் வீதம் தெரிவு செய்து கல்வி அமைச்சிற்கு வழங்கியதன் பின்னர் பாடசாலைகளுக்கு அந்தப் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர்.

7.3 பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்களால் புள்ளி வழங்கும் முறை ஒன்றின் அடிப்படையில் இப் பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் வழங்கப்படும் என்பதனால், அவ் விடயம் தொடர்பாக ஏற்படக் கூடிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படவேண்டியதும் குறித்த அமைச்சுக்களின் உரிய அதிகாரிகளுடன் ஆகும் என்பது மாத்திரம் வலியுறுத்தப்படுகின்றது.

## 8.0 முதலாவது நேர்முகப்பரீட்சை சபையில் முன்னிலைப்படுத்தவேண்டிய ஆவணங்கள்

8.1 பிள்ளைகளை தெரிவு செய்வதற்காக பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்கள், பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளையும், வழங்கப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறையுடன் பொருந்தக்கூடிய வகையில் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சான்றுப்படுத்துவதற்குரிய சகல ஆவணங்களது மூலப் பிரதிகள் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், இதற்கு மேலதிகமாக அவ் ஆவணங்களது நகல் பிரதிகளும் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

8.2 தம்மால் முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்களின் உண்மைத் தன்மை தொடர்பாக சத்தியக் கடதாசி ஒன்றினூடாக சான்றுப்படுத்துதல் வேண்டும்.

8.3 கிராம அலுவலர் காரியாலயத்திலிருந்து குறித்து வழங்கப்பட்ட வாக்காளர் இடாப்பில் பதிவு தொடர்பான விபரங்கள் தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பினூடாக நேர்முகப் பரீட்சை சபையினரால் உறுதிப்படுத்தப்படும். வாக்காளர் இடாப்பில் பதிவு தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் தோன்றும் பட்சத்தில் அவ் விடயம் தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்தை தொடர்புகொண்டு அவற்றை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8.4 முன்னிலைப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்டது என்பதாக நேர்முகப் பரீட்சை சபையினருக்கு தோன்றின், அதனை வெளியிட்டுள்ள நிறுவனம் அல்லது உத்தியோகத்தரிடன் அது தொடர்பாக வினவு அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான அதிகாரம் நேர்முகப் பரீட்சை சபை தலைவரை சாரும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ் விடயம் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமான வகையில் செயற்படுமாறும் தெரிவிக்க முடியும். அதன் படி

முன்னிலைப்படுத்தியுள்ள ஆவணம் அல்லது ஆவணங்கள், போலியான ஆவணம் அல்லது ஆவணங்கள் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவ்வாறான ஆவணம்/ ஆவணங்களை முன்னிலைப்படுத்தியமைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8.5 இந்த நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தின் போது முன்னிலைப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் ஏனைய தகவல்களுக்கமைய விண்ணப்பதாரரின் முன்னிலையில் புள்ளிகள் வழங்கும் படிவத்தில் புள்ளிகள் குறிக்கப்படும். இருப்பினும் பிழையான தகவல்கள்/ போலியான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் விண்ணப்பப் படிவங்களை நிராகரிக்க/ புள்ளிகளில் திருத்தம் செய்வதற்கு நேர்முகப் பரீட்சை சபைக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

## 9.0 தற்காலிக பட்டியல்

9.1 புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஒவ்வொரு வகுதிக்காகவும் தனித் தனியாக தெரிவு செய்யப்படும் என்பதுடன், தற்காலிக பட்டியல் மற்றும் காத்திருப்போர் பட்டியல் ஆகியன தயாரிக்கப்படும்.

9.2 தற்காலிக பட்டியல் மற்றும் காத்திருப்போர் பட்டியலை பிரசித்தப்படுத்த முன்னர் பாடசாலைக்கு அண்மையில் வசிப்போர் வகுதியின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பிள்ளைகளின் வதிவிடங்கள், வதிவிடங்களுக்கு சென்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்படும். வதிவிடத்திற்கு சென்று பரிசோதிக்கும் தருணத்தில் வதிவிடம் உறுதிசெய்யப்படவில்லை எனின் பட்டியலில் இருந்து பெயர் அகற்றப்படும். தேவையேற்படும் பட்சத்தில் ஏனைய வகுதிகளின் கீழும் வதிவிடப் பரிசோதனை மேற்கொள்ளப்படலாம்.

9.3 ஒன்றிற்கு மேற்பட்ட வகுதிகளுக்கு விண்ணப்பித்துள்ள பிள்ளைக்கு அவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட வகுதிகளின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பமொன்றில் குறித்த ஒரு வகுதியிலேனும் தெரிவு செய்யப்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படும் எனின் அந்த ஒரு வகுதியில் மாத்திரம் பிள்ளையின் பெயரை மீதப்படுத்தி ஏனைய வகுதிகளுக்குரிய பட்டியலில் இருந்து அப் பெயர் அகற்றப்படும்.

9.4 நேர்முகப் பரீட்சை சபையினால் தெரிவு செய்யப்படவுள்ள பிள்ளைகளின் தற்காலிக பட்டியல் மற்றும் காத்திருப்போர் பட்டியல் போன்றனவற்றை நேர்முகப் பரீட்சை சபையின் அங்கத்தவர்களது கையொப்பத்துடன் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலை இணையத் தளத்திலும் காட்சிப்படுத்தும் செயற்பாடு அதிபரால் மேற்கொள்ளப்படும் என்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் தனித் தனியாக இது தொடர்பாக அறியத்தரப்படமாட்டாது. ஆகையால் இவ் விடயம் தொடர்பாக பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்கள் கவனமாக இருப்பது அத்தியாவசியமாகும்.

## 10.0 மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்களை முன்னிலைப்படுத்தல்.

10.1 காட்சிப்படுத்தப்படும் தற்காலிக பட்டியல் மற்றும் காத்திருப்போர் பட்டியலை பாடசாலை அறிவித்தல் பலகை மற்றும் பாடசாலை இணையத் தளத்தில் காட்சிப்படுத்தி 02 வாரங்கள் நிறைவடைய முன்னர், குறித்த பாடசாலைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம், காட்சிப்படுத்த ஆவணங்களில் ஏதேனுமொரு இடத்தில் அனுமதிக்கான உரிமை கிடைக்கக்கூடாத ஒரு பிள்ளையின் பெயர் உள்ளங்கியிருப்பதை காணும் பட்சத்தில் அவ் விடயம் தொடர்பாக எதிர்ப்புக்கள் மற்றும்/ அல்லது தகைமைகள் இருந்தும் தமது பிள்ளையின் பெயர் பொருத்தமற்ற இடமொன்றில் குறிப்பிடப்பட்டிருப்பின் அவ் விடயம் தொடர்பாக தெரிவிக்கும் மேன்முறையீடொன்றை அறிவித்தல் பலகையில் அல்லது பாடசாலை இணையத் தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயாரித்து, பதிவுத் தபாலில் பாடசாலை அதிபருக்கு உடனடியாக அனுப்பிவைத்தல் வேண்டும். அத்துடன் தனது பெயர் மற்றும் முகவரியுடன் பதிவுத் தபாலுக்குரிய பெறுமதியுடைய முத்திரையும் ஒட்டப்பட்ட தபால் உறை ஒன்றும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இந்த 02 வார காலப் பகுதிக்குப் பின்னர் முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு மேன்முறையீடோ, எதிர்ப்புக்களோ கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

10.2 எதிர்ப்புக்களை முன்னிலைப்படுத்தும் போது மொத்தப் பட்டியலுக்கும் எதிராக முன்னிலைப்படுத்தாமல் பெயர் குறிப்பிட்டு முன்னிலைப்படுத்துதல் வேண்டும். இதன் போது எதிர்ப்புக்குள்ளாகும் பிள்ளை/ பிள்ளைகளின் பெயர்கள், அழைப்பு இலக்கம் மற்றும் தமது எதிர்ப்பினை சுருக்கமாக எழுதி அனுப்புவது அவசியமாகும்.

10.3 மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்களை விசாரிப்பதற்காக மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் பரிசோதனை சபை ஒன்று நியமனம் செய்யப்படும். இந்த சபை எதிர்ப்புக்களை முன்வைத்தவர்கள், எதிர்ப்புக்களுக்குள்ளாகியவர்கள் மற்றும் மேன்முறையீடுகளை முன்னிலைப்படுத்தியவர்கள் என தனித் தனியாக முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு முன்னிலைப்படுத்திய ஆவணங்களை மீளவும் பரிசோதிப்பதுடன் எதிர்ப்புக்களை பரிசோதிக்கும் போது எதிர்ப்புக்குள்ளாகிய பிள்ளையின் பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்களை அழைத்து

பரிசோதித்துப் பார்த்து தீர்மானம் மேற்கொள்ள முன்னராக அவர்களுக்கு விடயங்களை தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்பொன்று வழங்கப்படும்.

10.4 மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் பரிசோதனை சபையினால் மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்களை பரிசோதித்து உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தகைமைகளுக்கமைய (புள்ளிகளின் முன்னுரிமை வரிசைப்படி) மேன்முறையீட்டாளர்கள் மற்றும் எதிர்ப்புக்களுக்குள்ளாகியவர்கள்/ எதிர்ப்புத் தெரிவித்த விண்ணப்பதாரர்களை தற்காலிக பட்டியலில் பொருத்தமான இடத்தில் சேர்த்து திருத்தம் செய்யப்பட்ட தற்காலிக பட்டியல் தயாரிக்கப்படும்.

10.5 ஒவ்வொரு வகுதிகளுக்கு அமைவாகவும் திருத்தம் செய்யப்பட்ட தற்காலிக பட்டியலில் இருந்து பாடசாலைக்கு அனுமதிக்கக்கூடிய எண்ணிக்கைக்கமைய பட்டியலின் மேலிருந்து தெரிவு செய்யப்பட்டு இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும்.

10.6 தற்காலிக மற்றும் இறுதிப் பட்டியலில் ஏதேனுமொரு வகுதிக்கு தெரிவு செய்யப்படவேண்டிய எண்ணிக்கை பூரணப்படுத்தப்படும் இறுதி நிலைக்குரிய புள்ளிக்கு சமனான புள்ளிகளைப் பெற்ற இரண்டு பேர் இருக்கும் பட்சத்தில் பாடசாலைக்கு உள்ள அண்மைத் தன்மைக்கமைய வரிசைப்படுத்தி, தெரிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு வகுதிகளுக்கும் தனித் தனியாக புள்ளிகள் வழங்கப்பட்டாலும் அண்மைத் தன்மைக்கமைய புள்ளிகளை வழங்குவது மிகவும் நியாயமானது என்பதால், இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாடசாலைக்குள்ள அண்மைத் தன்மைக்கமைய (தூரத்திற்கமைய) வரிசைப்படுத்துதல் வேண்டும்.

10.7 மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்களை பரிசோதித்ததன் பின்னர் பிள்ளைகளை தெரிவு செய்வதற்கான இறுதிப் பட்டியல் மற்றும் காத்திருப்போர் பட்டியலை மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் சபையின் அங்கத்தவர்களது கையொப்பத்துடன் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலை இணையத் தளத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

10.8 மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்களை முன்னிலைப்படுத்திய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தொடர்பாக மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்களை பரிசோதிக்கும் சபையினால் வழங்கப்படும் தீர்ப்பே இறுதியானதாகும். ஒரு வேளை எதிர்ப்புக்குள்ளாகிய பிள்ளையின் பெற்றோர், சட்டபூர்வமான பாதுகாவலர்கள், முறையாக அறிவிக்கப்பட்டிருந்தும் எதிர்ப்புக்களை பரிசோதிக்கும் சபைக்கு வருகை தரவில்லை எனின் எதிர்ப்புக்கள் தொடர்பாக ஒரு தரப்பு சார் தீர்மானங்களை மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் சபை மேற்கொள்ள முடியும்.

10.9 பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்கள் விண்ணப்பித்துள்ள பாடசாலைகளில் ஒன்றிற்கு மேற்பட்டவற்றிற்கு தமது பிள்ளை தெரிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் பெற்றோர்/ சட்டபூர்வமான பாதுகாவலர்கள் தமது விண்ணப்பப் படிவத்தில் பாடசாலைகளைக் கோரியுள்ள வரிசையைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அதிகமாக உள்ள பாடசாலை பட்டியலில் பிள்ளையின் பெயரை மீதப்படுத்தி ஏனைய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பட்டியலில் இருந்து பிள்ளைகளின் பெயர்கள் அகற்றப்படும்.

10.10 அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட அல்லது தெரிவு செய்யப்படாத விண்ணப்பதார்ர்களுக்கு அவ் விடயம் தொடர்பாக அறியப்படுத்தும் கடிதமொன்று பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் அனுப்பப்படும். தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுள் எவரேனும் ஒரு பிள்ளை அனுமதிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள இரண்டு வாரங்களுக்குள் பாடசாலைக்கு அனுமதிக்கப்படவில்லை எனின், அப் பிள்ளை பாடசாலைக்கு அனுமதிக்கப்படமாட்டார் என்பதாக கருதப்பட்டு உரிய வெற்றிடம் காத்திருப்போர் பட்டியலிலிருந்து நிரப்பப்படும்.

10.11 தரம் ஒன்றிற்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பிள்ளையையும் அழைத்து வருவது கட்டாயமாகும்.

10.12 தரம் ஒன்றிற்கு மாணவர்களை தெரிவு செய்யும் செயற்பாடுகள் கால வரையறை ஒன்றிற்கமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் 2025 பாடசாலை முதலாம் தவணை ஆரம்பத்தில் பாடசாலைக்கு அனுமதிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளன.

## 11.0 தெரிவு செய்யப்படாத பிள்ளைகளுக்கு பாடசாலைகளை வழங்குதல்.

விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பாடசாலைகளுள் தெரிவு செய்யப்படும் பாடசாலைக்கு பிள்ளையை அனுமதிக்கவேண்டும் என்பதுடன், எந்தவொரு பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படாத பிள்ளையின் தாய்/ தந்தை/ சட்டபூர்வமான பாதுகாவலர் தமதி பிள்ளைக்கு மாற்றீட்டுப் பாடசாலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக கட்டாயமாக ஒரு மாத காலத்தினுள் தமது வதிவிடப் பிரதேசத்திற்குரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு புதிய விண்ணப்பப் படிவம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

அதற்கமைய சகல பிள்ளைகளுக்கு பாடசாலைகளை வழங்குவதற்கான செயற்பாடுகள் வலயக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படும்.

12.0 ***பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பணம் அல்லது வெறுவிதமான உதவிகளை பெற்றுக்கொள்வதை தடை செய்தல்.***

*சகல அரச பாடசாலைகளுக்கும் பிள்ளைகளை அனுமதிப்பதற்காக வசதிகள் மற்றும் சேவைகள் கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவக் கட்டணம் மற்றும் பிள்ளைகளிடமிருந்து அறவிடுவதற்காக பாடசாலையினால் அனுமதி பெறப்பட்டுள்ளவை தவிர்த்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே வேறு எந்தவிதமான கட்டணங்கள், நன்கொடை நிதிகள் அல்லது பொருட்கள் போன்றனவற்றை பாடசாலைக்கோ/ பாடசாலையுடன் தொடர்புடைய எந்தவொரு அமைப்பினருக்கோ/ மூன்றாம் தரப்பினருக்கோ வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. பிள்ளைகளை அனுமதித்ததன் பின்னரும் அவ்வாறாக வழங்கப்படலாகாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில் குறித்த செயற்பாடு சட்டவிரோதமான செயற்பாடொன்றாகும் என்பதுடன் அது தண்டை வழங்கப்படக்கூடிய குற்றம் ஒன்றாகும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.*

*இந்த செய்திப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்விச் செயலாளரையே சாரும்.*

*செயலாளர்*
*கல்வி அமைச்சு*
2024.06.28